# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி
# அசல் வழக்கு எண்.255/2013

| | | | |
|---|---|---|---|
| பெயர் | .. சுப்ரமணி | மதம் | .. இந்து |
| தந்தை / கணவர் பெயர் | .. வீராச்சாமி | தொழில் | .. விவசாயம் |
| வயது | .. 81 | ஜாதி | .. வன்னியர் |
| கிராமம் | .. தப்பக்குட்டை | நாள் | .. 04.01.2020 |
| வட்டம் | .. சங்ககிரி | | |

பி.சா.1 – சுப்ரமணி - குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி.

இந்த தாவா சொத்து சம்பந்தமாக எனது பெயரில் மற்ற பிரதிவாதிகள் அனைவரும் சேர்ந்து 2013-ஆம் ஆண்டு ஒரு கிரையப்பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார்கள் என்றால், சரிதான். ஆனால், அந்த பத்திரத்தை நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல, தாக்கல் செய்திருக்கிறேன். நான் கூறுவது தவறு, மேற்கண்ட ஆவணம் வாதிகள் தரப்பில்தான் வா.சா.ஆ.4 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால், நானும் போட்டிருக்கிறேன். எனது தரப்பில் நான் எந்தவொரு ஆவணங்களையும், இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால், சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு எந்தவொரு உரிமையும் இல்லை என்பதால்தான், எந்தவொரு ஆவணத்தையும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால், சரியல்ல, எனது பெயரில் உள்ள பத்திரத்தையும், எனது தகப்பனார் மாரிச்செட்டி பெயரில் எழுதிக்கொடுத்த பத்திரத்தையும் ஆகிய இரண்டு பத்திரத்தையும் தாக்கல் செய்திருக்கிறேன். எனது பெயரில் 2013-ஆம் ஆண்டு கிரையப்பத்திரம் எழுதுவதற்கு முன்பாக தாவா சொத்திற்கு உண்டான வில்லங்கச்சான்று போட்டுப்பார்த்தேனா என்றால், அது குறித்தும் நியாபகம் இல்லை. ஆனால், எனது பெயரில் கிரையப்பத்திரம் ஏற்படும் தேதியில் எனது தகப்பனாரும், அவரது சகோதரர் அம்மாசியும் ஏற்படுத்திக்கொண்ட பாகப்பிரிவினை பத்திரம், எனது தகப்பனார் மாரிச்செட்டிக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் மற்றும் வாதிகளின் குடும்பத்திற்குள் ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரம் ஆகியவற்றை பற்றி எனக்குத் தெரியும் என்று சொன்னால், சரிதான். ஆனால், மேற்கண்ட ஆவணங்களை பற்றி எனது கிரையப்பத்திரத்தில் சொன்னால், எனது

கிரையப்பத்திரம் பதிவு செய்ய மாட்டார்கள் என்பதால், மேற்கண்ட ஆவணங்களை பற்றி நான் சொல்லவில்லை என்றால், ஆமாம், ஆனால், வாதிகளின் குடும்பத்தார் செய்த பாகப்பிரிவினைப் பத்திரத்தில் (வா.சா.ஆ.3) எங்களுக்கு பங்குள்ளதாக விட்டு விட்டு எழுதியுள்ளார்கள். அவ்வாறு வாதிகள் குடும்பத்தார் எங்களுக்கு விட்டுவிட்டதாக கூறும் பங்கைத்தான் நான் கிரையம் செய்து கொண்டேனா என்றால், ஆமாம். நான் கூறுவது போல், வாதிகளின் குடும்பத்தார் எந்த சொத்தையும் எங்களுக்கு வா.சா.ஆ.3 ஆவணத்தின் மூலம் விடவில்லை, நான் தான் வாதிகளின் சொத்தை மோசடி செய்ய வேண்டும் என்பதற்காக வா.சா.ஆ.4 ஆவணத்தை ஏற்படுத்திக் கொண்டேன் என்று சொன்னால், தவறு. எனது தகப்பனார் தொட்டண்ணச்செட்டியார் மகன் மாரிச்செட்டிக்கு எழுதிக்கொடுத்த பத்திரத்தில் 7 சர்வே எண்களைக் குறிப்பிட்டு, விற்பனை செய்துள்ளார், ஆனால், வா.சா.ஆ.4 ஆவணத்தை ஒரே ஒரு சர்வே எண்ணான 65/3 என்பதை மட்டுமே குறிப்பிட்டு எழுதி இருக்கிறோம் என்றால், அவ்வாறு எவ்வாறு எழுதுவோம், 7 சர்வே எண்களையும் போட்டுத்தான் எழுதியிருக்கிறோம். நான் கூறுவது தவறு, மேற்கண்ட ஒரே ஒரு சர்வே எண்ணைத்தான் வா.சா.ஆ.4 ஆவணத்தில் குறிப்பிட்டு எழுதியிருக்கிறோம் என்றால், சரியல்ல. வா.சா.ஆ.4 ஆவணத்தின் 4ம் பக்கத்தில் சொத்து எங்களுக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்ற விபரம் சாட்சியிடம் படித்துக்காட்டப்பட்டு, இவ்வாறுதான் எழுதப்பட்டுள்ளது என்று வினா எழுப்பப்பட்டது, சாட்சி அதை கேட்டுவிட்டு, அது பற்றி எனக்குத் தெரியாது என்று கூறினார். எனது தகப்பனார் உயிருடன் இருக்கும்பொழுது, பஞ்சாயத்து வாய்மொழியாகப் பாத்தியப்பட்ட சொத்து என்று எழுதியுள்ளீர்கள், யார் யாருக்கு இடையே பஞ்சாயத்து நடந்தது என்ற விபரம் எனக்குத் தெரியுமா என்றால், அது தெரியாது. அவ்வாறு எனில், வா.சா.ஆ.3 ஆவணத்தில் கண்டுள்ள சொத்து எதன் அடிப்படையில் எங்களுக்குப் பாத்தியப்பட்டது என்று இந்த ஆவணத்தை எழுதியுள்ளீர்கள் என்றால், பூர்வீக படி பாத்தியப்பட்டது என்பதால், எழுதியிருக்கிறோம். பொய்யாக புதிய உரிமையையும், பிரச்சனையையும் ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக நானும், எனது குடும்ப உறுப்பினர்களும் சேர்ந்து வா.சா.ஆ.4 ஆவணத்தை எழுதியுள்ளோம், எனவே, அந்த ஆவணம் சட்டப்படி செல்லாது என்றால், தவறு. மேற்கண்ட ஆவணம் ஒரு பெயரளவுக்கு ஏற்படுத்தப்பட்ட ஆவணம், அதன்படி நான் அனுபவிக்கவில்லை என்று சொன்னால், தவறு. வா.சா.ஆ.4 ஆவணத்தின் அடிப்படையில் எனது பெயருக்கு பட்டா மாற்றிக்கொண்டேனா என்றால், கோர்ட்டில்

வழக்கு இருக்கிறது, அதுதான் பிரச்சனையாக இருக்கிறது, அதனால் பட்டா எப்படிக் கொடுப்பார்கள். தாவா சொத்து எனக்கு சொந்தம் என்பதற்கு வா.சா.ஆ.4 ஆவணத்தைத் தவிர வேறு எந்த ஆவணமும் என்னிடம் இல்லை என்று சொன்னால், வேறு ஆவணங்கள் இருக்கிறதா, இல்லையா என்று எனக்கு நியாபகம் இல்லை. சின்னப்பக்கவுண்டர் மகன் வீராச்சாமி என்பவர் யார் என்றால், அவர் எனது தகப்பனார், அவர் பெயருக்கு பட்டா எண்.17 இருப்பதாக வா.சா.ஆ.4 ஆவணத்தில் பட்டா இணைக்கப்பட்டுள்ளது என்றால், அது நியாபகம் இல்லை. பட்டா எண்.17-இல் அம்மாசிக்கவுண்டர், ரங்கநாதன், சண்முகம் ஆகிய மூவரின் பெயர் மட்டும்தான் உள்ளது, அதற்கு கீழ் உள்ள இடத்தை பயன்படுத்தி, எனது தகப்பனாரின் பெயரை மோசடியாக அந்த ஆவணத்தில் ஏற்படுத்திக்கொண்டு இருக்கிறேன் என்று சொன்னால், அது தவறு. மேற்கண்டவாறு பட்டாவை மோசடியாக ஏற்படுத்திக்கொண்டோம் என்பதற்காக சேலம் நில அபகரிப்பு பிரிவில் இந்த வழக்கின் 3-ஆம் வாதி ரங்கநாதன் புகார் அளித்துள்ளார், அதன் அடிப்படையில் 26.04.2013-ஆம் தேதி குற்ற எண்.13/13 என முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது, அந்த ஆவணம் வா.சா.ஆ.12 ஆக இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால், அது பொய் வழக்கு. மேற்கண்ட வழக்கில் கைது செய்யப்படுவதற்கு முன்பாக நாங்கள் ஜாமீன் வாங்கியிருந்தோமா என்றால், ஆமாம். இது சம்பந்தமாக சேலம் நீதிமன்றத்தில் குற்ற வழக்கு நிலுவையில் இருக்கிறதா என்றால், ஆமாம். மேற்கண்ட நடவடிக்கைகளிலிருந்து தப்பிப்பதற்காக அ.வ.எண்.47/2013 என்ற வழக்கை இதே நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்திருப்பதாக இந்த வழக்கின் வாதிகள் கூறுகிறார்கள் என்றால், அது பொய். மோசடியாக பட்டா எண் 17-இல் எனது தகப்பனார் பெயரை சேர்க்கவில்லை என்று சொல்கிறீர்கள், அவ்வாறு எனில் தற்போதும், எனது தகப்பனார் பெயர் உள்ள பட்டா எண்.17-ஐ இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு தயாராக இருக்கிறீர்களா என்றால், தயாராக உள்ளேன். ஏற்கனவே, மேற்கண்ட பட்டா இந்த வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது, அதில் எனது தகப்பனார் பெயர் இல்லை, ஆனால், தற்போது நான் வீம்பிற்காக எனது தகப்பனார் பெயரில் உள்ள பட்டாவை தாக்கல் செய்வதற்கு தயாராக இருப்பதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியல்ல. மேற்கண்ட குற்ற வழக்கில் எங்களுக்கு நகல் வழங்கப்பட்டுள்ளதா என்றால், ஆமாம் நகல் வழங்கிவிட்டார்கள். அதில் உள்ள விபரங்கள் எனக்குத் தெரியுமா என்றால், தெரியாது. எங்களுக்கு வழங்கப்பட்ட குற்ற

வழக்கின் நகலில் சேலம் நில அபகரிப்பு குற்றப்பிரிவு துணை கண்காணிப்பாளர் அவர்கள், சங்ககிரி தாசில்தார் அவர்களிடம் உண்மையாகவே பட்டா எண்.17-இல் சின்னப்பக்கவுண்டர் மகன் வீராச்சாமி என்பவர் பெயர் இருக்கிறதா, இல்லையா என்று விளக்கம் கேட்டு, மனு கொடுத்துள்ளார், அதற்கு சங்ககிரி தாசில்தார் அவர்களும், பட்டா எண்.17-இல் சின்னப்பக்கவுண்டர் மகன் வீராச்சாமி என்பவர் பெயர் இல்லை, என்று பதில் அளித்துள்ளார், அதற்குரிய ஆவணத்தையாவது எனக்கு வழங்கப்பட்ட நகலில் இருப்பதை தெரிந்து கொண்டேனா என்றால், அது பொய் வழக்கு. தாசில்தார் தான் கொடுத்த அறிக்கைக்கு ஆதரவாக பட்டா எண்.17-இன் அசல் ஆவணத்தின் ஜெராக்ஸ் நகலை தனது அறிக்கையுடன் தாக்கல் செய்துள்ளார், அந்த ஆவணத்தில் எனது தகப்பனாரின் பெயர் இல்லை, அதைப்பற்றியாவது தெரிந்து கொண்டீர்களா என்றால், யூ.டி.ஆர்-இன் பொழுது அவ்வாறு மாற்றி விட்டார்கள். யூ.டி.ஆர்-க்கு முன்புள்ள பட்டா எண்.17-ற்குரிய பட்டாவை நான் தாக்கல் செய்வதற்கு தயாராக உள்ளேனா என்றால், தயாராக உள்ளேன். வா.சா.ஆ.4 ஆவணத்துடன் இணைத்துள்ள பட்டாவிலேயே 6 சர்வே எண்கள் குறிப்பிடப்பட்டுள்ளது, அந்த 6-லும் எங்களுக்கு நிலம் உள்ளதா என்றால், சரிதான். 6 சர்வே எண்களிலும் எங்களுக்கு நிலம் இருப்பதாக கூறுகிறீர்கள், அவ்வாறு இருக்கும்பொழுது என்ன காரணத்திற்காக இந்த தாவா சர்வே எண்ணை மட்டும் வா.சா.ஆ.4 ஆவணத்தில் சொல்லியுள்ளீர்கள் என்றால், மற்ற சர்வே எண்கள் எங்களிடம் உள்ளது, இந்த ஒரு சர்வே எண் மட்டும் எங்களிடம் இல்லை. அவ்வாறு எனில், இந்த ஒரு சர்வே எண்ணை மட்டும் பிடிப்பதற்காகத்தான் வா.சா.ஆ.4 ஆவணத்தை எழுதினார்களா என்றால், ஆமாம். யூ.டி.ஆர்.-க்கு முன்புள்ள அ-பதிவேட்டிலோ, அதற்கு பிறகு 3 முறை திருத்தப்பட்ட பட்டாவிலும், எனது தகப்பனார் பெயர் இல்லை என்று சொன்னால், அது பொய், அவர்களாகவே ஏமாற்றி செய்து கொண்டார்கள். இவ்வாறு எங்களை ஏமாற்றி மோசடி செய்து விட்டதாக சொல்கிறீர்கள், அது சம்பந்தமாக ஏதேனும் வழக்கு தாக்கல் செய்து, நடவடிக்கை எடுத்துள்ளீர்களா என்றால், இனிமேல்தான் எடுக்க வேண்டும். எனது எதிர்வழக்குரையிலும், முதன்மை சாட்சியத்திலும் தாவா சொத்தை 70 வருடங்களுக்கு மேலாக நான்தான் ஓட்டி வருகிறேன், அதனால் எனக்கு எதிரிடை பாத்தியம் மூலம் சொந்தம் என்று சொல்லியிருக்கிறீர்கள். அவ்வாறு எனில் எனக்கு பரம்பரை சொத்து என்பதால், அதன்மூலம் பாத்தியம் என்று சொல்கிறேனா அல்லது எதிரிடை பாத்தியம் மூலம் சொந்தம் என்று சொல்கிறேனா என்றால், பரம்பரை மூலம் பாத்தியம் என்றுதான்

சொல்கிறேன். அவ்வாறு எனில், 70 வருடமாக ஓட்டி வருவதால், எதிரிடை பாத்தியம் இருப்பதாக ஒப்புக்குச் சொல்கிறீர்களா என்றால், அவ்வாறு எப்படிச் சொல்வேன், எனக்குப் பாத்தியம் உள்ளது. தாவா சொத்தில் எனக்கு எவ்விதமான உரிமையோ, அனுபவமோ இல்லை, ஆனால், வா.சா.ஆ.4 ஆவணத்தை ஏற்படுத்திக்கொண்டு எனக்கு உரிமை மற்றும் அனுபவம் இருப்பதாக பொய்யாக எதிர் வழக்காடி வருகிறேன் என்று சொன்னால், சரியல்ல. அனுபவப்படியோ, பரம்பரையாகவோ, தாவா சொத்தில் எனக்கு எவ்வித உரிமையும் இல்லை, அவ்வாறு இருக்கும்பொழுது, நான் ஏற்படுத்திக் கொண்டுள்ள வா.சா.ஆ.4 ஆவணமும் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்பதால், இந்த வழக்கில் வாதிகள் கோரியுள்ளபடி தீர்ப்பளிக்கப்பட வேண்டும் என்று சொன்னால், சரியல்ல. தாவா சொத்தைப் பொறுத்து, வா.சா.ஆ.4 ஆவணம் நான் ஏற்படுத்தி உள்ளதால், வாதிகள் கோரியுள்ளபடி விளம்புகை பரிகாரமும் பெற அருகதையுடையவர்கள் என்று சொன்னால், சரியல்ல.

ஒப்பம் / சுப்ரமணி

ஒப்பம் / திருமதி.மு.பாக்கியம்
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.